வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 05.09.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 248 பக்கங்கள் : 08



## புலமைப்பரிசில் தமிழ்மொழி மூலம் யாழ்ப்பாண மாணவன் முதலிடத்தில்!

யாழ்ப்பாணம், செப். 05

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி, அகில இலங்கை அளவில் சிங்கள மொழி மூலம் காலி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் 198 மதிப்பெண்களைப் பெற்று முதலிடம் பிடித்துள்ளதுடன் தமிழ் மொழி மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் 194 மதிப்பெண்களைப் பெற்று அகில இலங்கை அளவில் முதலிடம் பிடித்துள்ளார் என்று பரீட்சைகள்

07

# கச்சதீவு தொடர்பில் பேச்சுக்கு இடமில்லை!

## திட்டவட்டமாக கூறியது அரசு

கொழும்பு, செப்ரெம்பர் 05

**தென்னிந்திய அரசியல்வாதிகளுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கச்சதீவு செல்லவில்லை. அது எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். எனவே கச்சதீவு தொடர்பில் நாம் மீண்டும் பேசவேண்டிய தேவை இல்லை. அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அங்கு செல்ல முடியும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அபிவிருத்தி திட்டங்கள் சிலவற்றை ஆரம்பித்து வைப்பதற்காகவே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.



யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி கிழக்கு மற்றும் ஏனைய மாகாணங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைக்கும் நிகழ்வுகளில் எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். ஜனாதிபதியின் கச்சதீவு விஜயம் அதிவிசேடமானதல்ல.

தென்னிந்தியாவில் அவ்வப்போது அரசியல் தலைவர்கள் கச்சதீவு குறித்து

07

## மனிதப் புதைகுழிகள் உள்ளதாகக் கூறப்படும் குருக்கள்மடத்தை பார்வையிட்ட நீதியமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 05

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், சர்வதேச தரநிலைகளுக்கு இணங்க நியாயமான, பாரபட்சமற்ற, வெளிப்படையான விசாரணை செயல்முறைக்கு அதிகபட்ச ஒத்துழைப்பு வழங்கப்படும் என நீதி அமைச்சு அறிவித்துள்ளது.


மட்டக்களப்பு குருக்கள்மடம் மனித புதைகுழி வளாகத்திற்கு இன்று கள விஜயம் மேற்கொண்ட, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இந்த விடயம் தொடர்பில் கருத்துரைத்துள்ளார்.

அதற்கமைய, குருக்கள்மடம் புதைகுழி தொடர்பான முறைபாடுகளை நீதி அமைச்சு ஏற்று, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு, கண்ணியமான தீர்வுகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் எனவும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக, காணாமல் போனவர்கள் தொடர்பில் அதிகமாக

07





வரலாற்று பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்கை அம்மன் நேற்று தேரேறி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்த வேளை...! (செய்தியும் படங்களும் பக்கம் 2இல்)



## மண்டைதீவு புதைகுழிக் கிணற்றை அகழுமாறு வலியுறுத்தி முறைப்பாடு!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 05

மண்டைதீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய உடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் கிணறுகளை அகழ்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் வெளிக் கொணரப்படுவதுடன் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதுடைய ஸ்ரிபன் மரில்டா,

07

## கச்சதீவை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை!

கொழும்பு, செப். 05

சுற்றுலாத்துறையை இலக்காகக்கொண்டு கச்சதீவை அபிவிருத்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பின் போது

07

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு எதிரான வழக்குக்கு தடை

கொழும்பு, செப். 05

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஓய்வு பெற்ற மூத்த டிஐஜி ரவி செனவிரத்னவுக்கு எதிரான வழக்கின் விசாரணை நடவடிக்கைகளை இடைநிறுத்தி மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த வழக்கு தற்போது கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

2023 ஆம் ஆண்டு செனவிரத்ன குடிபோதையில் வாகனம் ஓட்டி வீதி விபத்தைத் தடுக்கத்

07

## அரியாலை சித்துபாத்தி மனித புதைகுழி: மேலும் 4 எலும்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், செப். 05



அரியாலை மனித புதைகுழியில் இருந்து நேற் றுப் புதன்கிழமை புதிதாக 06 எலும்புக் கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப் பட் டுள்ள நிலையில் மேலும் 04 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரியாலை மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் கடந்த 25 ஆம் திகதி

07

## இலங்கை தமிழர்கள் சட்டபூர்வமாக இந்தியாவில் தங்குவதற்கு அனுமதி

சென்னை, செப். 05


2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதிக்கு முன் உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்து, ஏதிலிகளாக பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள் சட்டப்பூர்வமாக இந்தியாவில் தங்குவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இலங்கை தமிழர்கள் இனி சட்ட விரோத குடியேறிகள் அல்ல


07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## தேரேறி அருள்பாலித்தாள் தெல்லிப்பழை துர்க்கை!

யாழ்ப்பாணம், செப். 05

வரலாற்று பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று காலை முதல் அம்பாளுக்கு விசேட அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்று வசந்த மண்டபத்தில் விநாயக பெருமான், துர்க்கை அம்மன், முருகப்பெருமானுக்கு சிறப்பு பூசைகள் நடைபெற்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் வசந்த மண்டபத்தில் இருந்து வெளிவீதிக்கு எழுந்தருளினார். தொடர்ந்து, தேரில் ஆரோகணித்து மங்கல வாத்தியங்கள் முழங்க பிராமண ஆச்சாரியர்களின் வேத மந்திரங்கள் ஒலிக்க பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். தொடர்ந்து, தேரில் உலா வந்து பக்தர்களுக்கு அம்பாள் அருள்பாலித்தாள்.

இந்தத் தேர்த் திருவிழாவில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

12 நாட்களைகொண்ட ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இன்று வெள்ளிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழா நடைபெற்று மாலை கொடியிறக்கம் நடைபெறும். (ஐ)

## 2.2 இலட்சம் ரூபாய்க்கு ஏலம்போன மாம்பழம்!

வவுனியா, செப். 05

உக்கிளாங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவில் மாம்பழம் ஒன்று 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம்போயுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை ஆலயத்தின் மாம்பழத் திருவிழா நடைபெற்றது.

இதன்போது, விநாயகருக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று கோவில் வளர்ச்சி நிதிக்காக ஏலத்தில் விடப்பட்டது. பலத்த போட்டிக்கு மத்தியில் 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு அந்த மாம்பழம் ஏலம்போனது.

உக்கிளாங்குளத்தை சேர்ந்த திருமதி சிந்துஜா உபாரிஸ் ஜெகீஸ்வரன் என்பவர் அந்த மாம்பழத்தை வாங்கினார். இவர், கடந்த வருடமும் 2 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய்க்கு மாம்பழத்தை வாங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஐ-10)

## புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 05

உடற்பயிற்சி போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்ப்பாணம் புத்தூர் சிறீ சோமஸ்கந்த கல்லூரி மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.


மங்கல வாத்தியங்கள் முழங்க, விருந்தினர்கள் வலி. கிழக்கு பிரதேச சபைக்கு முன்பாக இருந்து பாடசாலை வரை அழைத்து வரப்பட்டனர். பின்னர், தேசியக் கொடியேற்றல், பாடசாலை கொடியேற்றல் என்பன நடைபெற்றன.

அதன்பின்னர் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டு, இறை வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சி போட்டியில் தேசிய ரீதியாக முதலிடம் பெற்ற மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் நடைபெற்றன. கல்லூரி முதல்வர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், யாழ். கல்வி வலய பணிப்பாளர் மாலதி முகுந்தன், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## யாழ். செட்டித்தெரு மெ.மி.த.கவில் 10 மாணவர்கள் சித்தியடைந்தனர்!



யாழ்ப்பாணம், செப். 05

நேற்று வெளியான புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி யாழ்ப்பாணம் செட்டித்தெரு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் 10 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 30 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

அத்துடன், மிகக் குறைந்த வளங்களுடன் இந்தப் பாடசாலை இந்த மைல் கல்லை எட்டியுள்ளது. (ஐ)

## இறம்பைக்குளம் மகளிர் ம. வியில் 76 மாணவர்கள் சித்தியடைந்தனர்

வவுனியா, செப். 05

புலமைப்பரிசில் பரீட்சையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் 76 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை 154 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களில், 149 மாணவர்கள் 70இற்கும் அதிகமான புள்ளிகளை பெற்று சிறந்த பெறுபேற்றை பெற்றனர். இதில், 76 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். (ஐ-10)

## காற்றாலைக்கு எதிராக நேற்றும் போராட்டம்!

மன்னார், செப். 05

காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல், கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக நேற்று 33ஆவது நாளாக போராட்டம் நடைபெற்றது.

நேற்றைய போராட்டத்துக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலய பங்கு மக்கள் ஆதரவு வழங்கினர்.

மன்னார் நகர சுற்றுவட்ட சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு - கோஷங்களை எழுப்பி போராட்டத்தை நடத்தினர். அத்துடன், அவர்கள் மன்னார் நகர சுற்றுவட்டத்தில் இருந்து, மன்னார் மாவட்டச்செயலகம் வரை பேரணியாகச் சென்று, மீண்டும் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியை அடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வீடமைப்பு பிரதி அமைச்சர் கிளிநொச்சிக்கு வருகை!

கிளிநொச்சி, செப். 05

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் சரத் மற்றும் அமைச்சின் அதிகாரிகள் கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் மக்களை சந்தித்து நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சால் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் மக்களுடன் கலந்துரையாடினர். (ஐ)

## வடக்கு கடற்படையின் புதிய தளபதி ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், செப். 05

வட மாகாண கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே பதவியேற்றுள்ளார்.

புதிதாக பதவியேற்ற கடற்படை தளபதி வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை நேற்று வியாழக்கிழமை மரியாதை நிமித்தம் ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.(ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.09.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுரவின் கச்சதீவு விஜயம்

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திடீரென்று கச்சதீவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் கச்சதீவு அவ்வப்போது பேசுபொருளாவதுண்டு. இந்தப் பின்புலத்தில் அண்மையில், நடிகர் விஜய் கச்சதீவை மீட்பது பற்றி பேசியிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில் அநுர கச்சதீவுக்கு திடீரென்று விஜயம் செய்தமையை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கான பதிலாகப் புரிந்து கொள்ள முடியுமா?

பதில் - புரிந்து கொள்ளலாம் ஆனால், தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கச்சதீவு தொர்பில் பேசுவது புதிய விடயமல்ல - பல தசாப்தங்களாகப் பேசி வருகின்றனர். கருணாநிதி தொடக்கம் ஜெயலலிதா வரையில் சட்டமன்றத்தில் தீர்மானங்களை கொண்டு வந்திருக்கின்றனர். மு. க. ஸ்டாலின் பல முறை பேசியிருக்கிறார். எவ்வாறு வடக்கில் தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறல்கள் உள்ளூர் அரசியலாக்கப்படுகிறதோ அதேபோன்றுதான் தமிழ்நாட்டிலும் கச்சதீவு உள்ளூர் அரசியலுக்கான கவர்ச்சிகரமான விடயமாக இருக்கிறது.

இதற்கான பதிலை அநுர அரசாங்கம் வழங்க முற்படுகிறது என்றால் தேசிய மக்கள் சக்தியின் வெகுசன கவர்ச்சிக்கான ஒரு துருப்புச்சீட்டாக கச்சதீவு விடயத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயற்படுகிறது என்றே புரிந்து கொள்ள வேண்டும். இதற்கப்பால், இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இரு தரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் உடன்பாட்டை ஒரு தரப்பாக அத்துமீற முடியாது. இந்த விடயத்தில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டை ஏற்கனவே முன்வைத்திருக்கிறது.

இந்த நிலையில் இந்தியாவுக்கு இது தொடர்பில் கூறுவதற்கு அநுர அரசாங்கத்திடம் எதுவுமில்லை - அதற்கான அவசியமும் இல்லை. ஆனால், இங்கு கவனிக்க வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் கச்சதீவு தொடர்பான கருத்துகளுக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் பதிலளிக்க முற்படும்போது இன்னொரு புறமாக தமிழ்நாட்டு அரசியல் தரப்புகள் தங்களுடைய உள்ளூர் அரசியலுக்கு அவ்வப்போது தீனி போட்டுக் கொள்வதற்கு மறைமுகமாக இலங்கையின் ஆளும் தரப்பு உதவுகிறது. தமிழ்நாட்டின் அதிகாரத்தை இலக்கு வைத்து புதிய கட்சியின் மூலம் நகர்ந்து கொண்டிருக்கும் நடிகர் ஒருவரின் கூற்றுக்கு அநுர குமார பதிலளிக்க முற்பட்டால், அதன் பொருள் மறைமுகமாக குறித்த நடிகரின் அரசியல் வளர்ச்சிக்கு அநுர உதவுவதற்கு விரும்புகிறார் என்றே புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சனையானது தீரும் பிரச்னை இல்லை. அது தொடரும். ஏனெனில், அதற்கான நிரந்தரத் தீர்வை காணும் முயற்சிகள் எவையும் வெற்றியளிக்கவில்லை. இந்த நிலையில் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் உதவியின்றி அதனை இந்திய மத்திய அரசாங்கத்தால் செய்ய முடியாது. இது வரையான அனுபவங்கள் இதற்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனாதிபதியின் கச்சதீவு விஜயம் அரசியல் கவர்ச்சிக்கும் வெகுசன அரசியலை பலப்படுத்தும் ஜே.வி. பியின் திட்டத்துக்கும் ஒருவேளை பயன்படலாம் - முக்கியமாக வடக்கு மாகாண மீனவர்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு இதுபோன்ற அதிரடியான கச்சதீவு விஜயங்கள் பயன்படக்கூடும். ஆனால், பிரச்னைக்கான நிரந்தர தீர்வை காண்பதற்கு பயன்படப் போவதில்லை. உண்மையிலேயே, இந்தப் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வை காண்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அக்கறை கொண்டிருந்தால், தமிழ்நாட்டோடு பேசுவதற்கான ஒரு பொறிமுறையை கண்டடைய வேண்டும்.

# இந்தியா சென்ற இலங்கை தமிழ் ஏதிலிகளுக்கு தண்டனை விதிகளிலிருந்து விலக்களிக்க முடிவு

சென்னை, செப். 05

2025 ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவுக்குச் சென்ற இலங்கை தமிழ் ஏதிலிகளுக்கு மத்திய அரசு தண்டனை விதிகளிலிருந்து விலக்கு அளிக்கவுள்ளதாக தெறிந்து தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த இலங்கைத் தமிழ் ஏதிலிகள் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, பயண ஆவணங்கள் அல்லது விஸா இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கும் தண்டனை நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தாமாக முன்வந்து இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கை ஏதிலிகளுக்கு விசா கட்டணங்கள் மற்றும் தங்கியிருக்கும் காலத்தை விட அதிக காலம் தங்கியிருந்ததற்கான அபராதத்தைத் தள்ளுபடி செய்யவும் முடிவெடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலைக்கு மாணவர்களை உள்வாங்க புதிய சுற்றறிக்கை

கொழும்பு, செப். 05

பாடசாலைகளில் 5 மற்றும் 6 ஆம் தரங்கள் தவிர்ந்த 2 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை மாணவர்களை உள்வாங்குவதற்கு புதிய சுற்றறிக்கையை வெளியிடும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துவதற்காக வகுப்பறையொன்றிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் மாத்திரம் பேண வேண்டியது அவசியமாகும்.

அதனால், நாட்டிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்தி, பாடசாலைகளில் 5 மற்றும் 6 ஆம் தரங்கள் தவிர்ந்த இடைநிலைத் தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதற்காக சரியான முறையை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதென அடையாளம் காணப் பட்டுள்ளது.

குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இடைநிலைத் தரங்களில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தற்போது கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு உள்வாங்குவதற்கு உண்மையான தேவையுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் பாடசாலைக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக, புதிய சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனை செயற்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள உப செயற்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளையும் கருத்தில் கொண்டு, பாடசாலைகளில் 5 மற்றும் 6 ஆம் தரங்கள் தவிர்ந்த 2 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை மாணவர்களை உள்வாங்குவதற்கு ஏற்புடைய வகையில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைச் சுற்றறிக்கைகளை இரத்துச் செய்து, அதற்குப் பதிலாக புதிய ஆலோசனைச் சுற்றறிக்கையை வெளியிடுவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## மாகாணசபை தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்!

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, செப். 05

மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். பழைய முறைமையின்கீழ் அத்தேர்தல் நடத்தப்படும் என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் சட்டம் இயற்றப்பட்டிருந்தாலும், எல்லை நிர்ணய அறிக்கை சபையில் நிறைவேற்றப்படவில்லை. எனவே, பழைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது. இணக்கம் எட்டப்பட்டால் அது தொடர்பான சட்ட திருத்தம் சபையில் முன்வைக்கப்படும்.

தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை. அதனை நடத்தும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம் - என்றார். (அ)

## மகிந்தவின் உத்தியோகபூர்வ வீடு குற்ற புலனாய்வு துறைக்கு

கொழும்பு, செப். 05


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

அரச உயர் அதிகாரிகளால் இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை அமுல்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு எதிர்வரும் காலங்களில் சபாநாயகரிடம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 05 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரயோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்தநாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன்யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக போய் முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்துநீங்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். வியாபாரத்தில் விஐபிகள்வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**சிம்மம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**கன்னி**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவுநனவாகும் நாள்.

**துலாம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருட்சிகம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்தமனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கூடுதல் லாபம் கிடைக் கும். சக ஊழியர்கள் மதிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும்.

**கும்பம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். மறை முகபிரச்சினைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**மீனம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

# காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 05

காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இந்திய - இலங்கை கடற்போக்குவரத்துக்கு மேலதிகமாக இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் பொருட்களை கொண்டுவருதல் மற்றும் இங்கிருந்து என்ன பொருட்களை கொண்டு செல்லலாம் எனவும் இதன் மூலம் ஏற்படும் தொழில் வாய்ப்பு மற்றும் சாதக பாதகங்கள் ஆராயப்பட்டன.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி தேவைகளுக்கான காணித் தேவைப்பாடு தொடர்பாகவும் இவ் துறைமுக அபிவிருத்தியை ஏற்படுத்துவதனூடாக எவ்வாறான சிறப்பான சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது அதனால் ஏற்படும் பாதக விளைவுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக பிராந்திய இணைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகத்தை எளிதாக்குதல் மற்றும் வடக்கு மாகாணத்துக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குதல், வேலைவாய்ப்புகள், சுற்றுலாத்துறை வளர்ச்சி, சுற்றுச்சூழல் தாக்கம், சமூக நடத்தையில் ஏற்படும் மாற்றம், அரச சேவைகள், போக்குவரத்து சேவைகள் போன்றனவற்றின் அபிவிருத்தி சார் விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை துறைமுக அதிகார சபை உதவி முகாமைத்துவ பணிப்பாளர் ஜெ. ஏ. சந்திரரத்ன, பிரதம பொறியியலாளர் சி. எல். தஸநாயக்க, திட்ட ஒருங்கிணைப்பாளர் பி. கெட்டியாராய்ச்சி, பிரதம பொறியியலாளர் எஸ். எச். எம். பி. அபயசேகர, நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் தேவ சுரேந்திரா, பிரதம பொறியியலாளர் கே.ஆர்.என்.என். எம் காரியவசம், யாழ்ப்பாணம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## இறம்பைக்குளம் மகா வித்தியாலத்தில் 76 மாணவர்கள் சித்தி

வவுனியா, செப். 05

தரம் 05 புலமைப்பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகிய நிலையில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் 76 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் புலமைப்பரீட்சைக்கு இம்முறை 154 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 149 மாணவர்கள் 70 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேற்றை அடைந்துள்ளனர்.(எ-10)

# நவீன கடலுணவு பதப்படுத்தும் தொழிற்சாலை திறக்கப்பட்டது



யாழ்ப்பாணம், செப். 05

அன்னை ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் நவீன கடலுணவு பதப்படுத்தும் தொழிற்சாலையின் திறப்பு விழா நேற்று முன்தினம் நாவற்குழியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக நீரியல் மற்றும் கடல்சார் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ். ஜே. கஹவத்தவும் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் பங்குபற்றினர். (எ)

## தமிழ் மத்திய மகா வித்தியாலத்தில் 75 மாணவர்கள் சித்தி

வவுனியா, செப். 05

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 75 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலான பெறுபேற்றை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இம்முறை 165 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 159 மாணவர்கள் 70 இற்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளனர். (எ-10)

# தெற்கிலும் வடக்கிலும் இனவாதத்துக்கு தூபமிடும் செயல்பாடுகள் நடக்கின்றன

## ஜெகதீஸ்வரன் எம்.பி குற்றச்சாட்டு

வவுனியா, செப். 05

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன, மத, மொழி வேறுபாடின்றி செயல்படுகின்றது. ஆனால், தெற்கிலும் வடக்கிலும் இனவாதத்துக்கு தூபமிடும் செயல்பாடுகள் நடக்கின்றன என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன, மத, மொழி பேதமற்ற அரசாங்கம் என்பதை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளோம். அரசியலுக்கு அப்பால் சென்று நாங்கள் மக்களின் மனங்களை வென்றுள்ளோம் என்பதை கடந்த தேர்தல்களின் மூலம் நிரூபித்துள்ளோம். வடக்கு மாகாணத்துக்கு அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் அதிக நிதியை ஒதுக்கவுள்ளோம். கடந்த அரசாங்கத்தைப் போல் இல்லாமல் நாம் செயல்படுவதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாம் அரசாங்கத்தின் ஊடாக வேலைத்திட்டங்களுக்கான நிதியை ஒதுக்குகின்றோம். அதைச் சரியாக வழிநடத்த வேண்டியது அதிகாரிகளின் பொறுப்பும் கடமையுமாகும். தொழில் நுட்ப ரீதியாக அதனை சரியாக அதிகாரிகளே வழிநடத்த வேண்டும்.

சிறு சிறு பிரச்னைகள் ஏற்படுகின்ற போது அதனை அரசியலாக்காது அதனைச் சுட்டிக் காட்டி திருத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட முன்வர வேண்டும். நாட்டை கட்டியெழுப்பும் பாரிய வேலைத் திட்டத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்" - என்றார்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆண்டுதோறும் 200 சிறுவர் புற்றுநோயால் பலி!

## புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டம் தகவல்

கொழும்பு, செப். 05

**இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா தெரிவித்தார்.**

முறையான மருத்துவ சிகிச்சை மூலம் இந்த நிலைமையைத் தணிக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

2022 ஆம் ஆண்டில், அடையாளம் காணப்பட்ட அனைத்து புற்றுநோய் நோயாளிகளில், 904 பேர் சிறுவர்கள் ஆவர்.

கடந்த 15 ஆண்டுகளில் தரவுகளைப் பார்க்கும்போது, சிறுவர் பருவ புற்றுநோய் நோயாளிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லை என்பது தெளிவாகக் காட்டுகிறது.

இந்த எண்ணிக்கை பொதுவாக 600 முதல் 800 வரையிலான வரம்பிற்குள் உள்ளது.

இப்போது, ஆண்டுதோறும் சுமார் 900 சிறுவர் பருவ புற்றுநோய் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

2019 ஆம் ஆண்டில் சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் இறந்துள்ளனர்.



ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோயால் இறப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றால் சிறுவர்களுக்கு புற்று நோய்களை குறைக்கலாம்-என்றார். (அ)

# ஜே. வி. பியின் வன்முறையை பிரதமர் ஏற்றுக்கொள்கிறாரா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, செப். 05

ஜே. வி. பியினர் வன்முறையை மீண்டும் கைகளில் எடுத்துள்ளனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய இவற்றை ஏற்றுக் கொள்கிறாரா - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி.

நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜே. வி. பியின் பழைய முகம் தற்போது மீண்டும் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. ஜே. வி. பி. என்ற கட்சியை மறைத்து தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையை நம்பியே இளம் தலைமுறையினர் இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்தனர். அத்தோடு புதிய அரசியல் கலாசாரமொன்று உருவாக்கப்படும் என்றும் நம்பினர். ஆனால், அந்த நம்பிக்கைகளுக்கு அப்பால் ஜே.வி.பி. மிகவும் பாரதூரமான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. வன்முறையை மீண்டும் கைகளில் எடுத்துள்ளனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனை ஏற்றுக்கொள்கின்றாரா? மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படுகின்றன. சட்டத்தின் பெயரால் வன்முறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். நாட்டில் மீண்டும் ஒருபோதும் வன்முறை கலாசாரம் தலைதூக்கக்கூடாது. தமக்கு சவாலாக இருக்கக் கூடியவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்துகின்றனர்.

நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்கு பாதாள உலகக் குழுவினர் பயன்படுத்தப்படுகின்றனர். தேசிய மக்கள் சக்தியின் பாதாள உலகக் குழுவினர் அரசியல் கட்சி பணிமனைகளுக்கு சென்று பலவந்தமாக அவர்களின் சொத்துகளை கைப்பற்றுகின்றனர்.

கடந்த ஆட்சியாளர்கள் அனைவரும் கள்வர்கள் எனக் கூறிய தேசிய மக்கள் சக்தியினர் தான் இன்று இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (ஐ)

# இந்தியாவுடன் சேர்ந்து வர்த்தகம் இலங்கை அபிவிருத்துக்கு நல்லது!

## ரவி கருணாநாயக்க கருத்து

கொழும்பு, செப். 05

அமெரிக்கா இந்தியாவுக்கு விதித்துள்ள தீர்வை வரி அந்நாட்டு ஏற்றுமதி பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

எவ்வாறிருப்பினும் இந்த சூழலைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவை மீறி செயற்படுவதை விட இந்தியாவுடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது எமது அபிவிருத்திக்கு சிறந்ததாகும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்கா இந்தியாவுக்கு விதித்துள்ள தீர்வை வரி அந்நாட்டு ஏற்றுமதி பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

அது இலங்கையிலும் மறைமுக தாக்கத்தை செலுத்தும்.

எனவே இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆனால் அரசாங்கத்திடம் இதற்கான திட்டமிடல்கள் இல்லை.

தற்போது இலங்கை மின்சாரசபை பங்குகளாகப் பிரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

எந்த அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பது யாருக்கும் தெரியாது.

எந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை பாவனையாளர்களை பாதுகாப்பவையாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்தின் கீழுள்ள நிறுவனம் என்பதற்காக எதேச்சதிகாரமாக தீர்மானங்களை எடுத்து, ஆசியாவில் அதிக மின்கட்டணம் அறவிடப்படும் நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டால் போட்டி நிலைமை அற்றுப் போகும்.

அவ்வாறு போட்டி நிலைமை இல்லாது போகும் பட்சத்தில் அது ஏற்றுமதித்துறையையும் பாதிக்கும்.

எனவே இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

மறுபுறம் சுங்க சேவைகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

சுங்க சேவைகளை இந்தியாவின் வளர்ச்சியுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

அவ்வாறில்லை எனில் சுங்கத்தால் கிடைக்கக் கூடிய வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்படும்.

இங்கு இந்தியாவை மீறி வர்த்தகத்தில் ஈடுபடுவதை விட, இந்தியாவுடன் இணைந்து வர்த்தகத்தை முன்னெடுப்பதே சிறந்ததாகும்.

உலகிலேயே நான்காவது பெரிய பொருளாதாரம் கொண்ட நாடாக இந்தியா அபிவிருத்தியடைந்துள்ளது.

எனவே இந்தியாவுடன் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றால் அது எமது அபிவிருத்தியில் விரைவான வளர்ச்சியை ஏற்படுத்தும்-என்றார். (அ)

# ரயிலுடன் யானை மோதி விபத்து!

கொழும்பு, செப். 05

ஹபரணை, புவக்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவு நேர அஞ்சல் ரயிலில் காட்டு யானை மோதி விபத்துக்குள்ளானது.

ஹபரணைக்கும் பலுகஸ்வெவவுக்கும் இடையில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ரயிலில்மோதுண்ட யாணைக்கு சுமார் 20 வயது இருக்கும் என வனவிலங்கு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக யானையின் முன் வலது காலில் கடும் காயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, செப். 05

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்றைய தினத்துடன் ஒப்பிடும் போது, நேற்று சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விவரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது இன்று முறையே 298.29 ரூபாவாகவும், 305.82 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 298.44 ரூபாவாகவும், 305.96 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

எனினும், ஏனைய பல நாடுகளின் பெறுமதிக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளது.

அதே நேரத்தில் வளைகுடா நாணயங்களுக்கு எதிராக அதன் மதிப்பு நிலையானதாக உள்ளது. (அ)

# 33 நிறுவனங்களை மூடுவதற்கு அனுமதி!

கொழும்பு, செப். 05

தற்போது தொழிற்பாட்டு நிலையில் இல்லாத 33 அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை முறையாக மூடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு முயற்சியின் இரண்டு கட்டங்களின் கீழ் மூடப்பட உள்ளன.

பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கல் மற்றும் மூலோபாய ரீதியான பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக, குறித்த காலத்திற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள ஒருசில அரச தொழில் முயற்சிகள் தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் சமகாலத்துடன் ஏற்புடையதாக இன்மை மற்றும் சந்தைத் தேவைகளுடன் பொருந்தாமை போன்ற காரணங்களால் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்குவது நடைமுறைக்குச் சாத்தியமற்றது, குறைவான நிதிச் செயலாற்றுகை போன்ற காரணங்களால் செயலிழந்து காணப்படுகின்றன.

தேசிய பொருளாதாரத்திற்கு அல்லது அரச சேவைகளை வழங்குவதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குகின்ற நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் போன்ற பல்வேறு வகைகளுக்குரிய அரச தொழில் முயற்சிகள் அரசுக்கு செலவுச் சுமையாக தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்குப் பதிலாக, குறித்த நிறுவனத்தைக் குலைத்து முடிவுறுத்துவது பொருத்தமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள விசேட குலைத்தல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் தற்போது தொழிற்பாட்டு நிலையில் இல்லாத 33 அரச தொழில் முயற்சிகளை 02 கட்டங்களாக முறையாக குலைத்து முடிவுறுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# போலி இலக்கத் தகடுகளுடன் பயணித்த சொகுசு காருடன் பெண் மருத்துவர் கைது!

கொழும்பு, செப். 05

போலி இலக்கத் தகடுகளுடன் கூடிய சொகுசு காரை செலுத்தி வந்த பெண் மருத்துவர் ஒருவர், கண்டி பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி வாரியபொல சுமங்கல மாவத்தையில் பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு கிடைத்த தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரின் கணவரும் ஒரு மருத்துவர். இந்த காரின் உரிமை அவரது கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனால் அதில் உள்ள உரிமத் தகடுகள் அவரது சகோதரர்களில் ஒருவருக்குச் சொந்தமான காரின் உரிமத் தகடுகள் என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்குரிய மருத்துவர் கண்டி, பேராதனையில் உள்ள ஒரு மருத்துவமனையில் பணி புரிகிறார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பல்கலையில் பகிடிவதை 6 மாணவிகள் உட்பட 15 பேர் கைது

## குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நடவடிக்கை

ஒலுவில், செப். 05

**கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் பயிலும் மாணவிகள் குழுவை பகிடிவதை - வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் பேரில் 6 மாணவிகள் உட்பட 15 மாணவர்களை குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.**

இதே பல்கலைக்கழகத்தில் கற்கும் 24 முதல் 26 வயதுக்குட்பட்ட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயிலும் மாணவிகள் குழுவை சந்தேக நபர்கள் பகிடிவதை - வன்கொடுமை செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் புதன்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# 180 புள்ளிகள் பெற்று மாணவன் சாதனை

மட்டக்களப்பு, செப். 05

மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி அதிகூடிய 180 புள்ளிகளை பெற்று யோகேஸ்வரராஜா பிரணவ் என்ற மாணவன் சாதனை படைத்துள்ளார்.

மட்டக்களப்பு நகர பாடசாலைகளில் மிகவும் அதிகூடிய புள்ளியாக இந்த 180 புள்ளி என்பது திகழ்கிறது.

இதேவேளை, புனித மைக்கேல் கல்லூரியில் இம்முறை



128 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி 52 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (எ-08)

# திருமலையில் மாணவ தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டம்

திருகோணமலை, செப். 05

சிறுவர் பாதுகாப்பு தொடர்பான "மாணவத் தூதுவர் தேசிய வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்கில் திருகோணமலை மாவட்ட செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் கல்வி அமைச்சு இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தன.

சிறுவர்களின் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சேவைகளைப் எவ்வாறு பெற்றுக்கொள்ளல், மாணவர் தலைவர்கள் தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக்கொள்ளும் விதம், பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் இதன்போது மாணவர்களின் மத்தியில் தெளிவூட்டப்பட்டன. (எ-12)

# எதிர்காலம் மோசமான நிலையில் உயர் பொலிஸ் அதிகாரி கவலை

கல்முனை, செப். 05

"தற்போது சிறுவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது குறைவு. அவர்களின் எதிர்காலம் மோசமான நிலையில் சென்று கொண்டிருக்கின்றது"- இவ்வாறு அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 159 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு ஏற்பாட்டில் கல்முனை இயேசு சீவிக்கின்றார் சிறுவர் இல்ல சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கல்முனை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி ஆர். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ. வாஹிட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல, முதலில் குறித்த இல்ல சிறுவர்களின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்ததுடன் அறிவுரையும் வழங்கினார்.

"எதிர்காலம் மோசமான நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. பிள்ளைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துங்கள். தற்போது சிறுவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது குறைவு. எனவே, சிறுவயது முதல் எமது பிள்ளைச் செல்வங்களை நாங்கள் பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும். சிறுவர்களுக்கு உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வை பெற அனைவரும் ஒத்துழைப்புகளை நல்க வேண்டும்"- என்றார். (எ-01)

# காரைதீவு கோட்டத்தில் 41 மாணவர்கள் சித்தி!

காரைதீவு, செப். 05

கல்முனை வலயத்தில் உள்ள காரைதீவுக்கோட்டத்தில், இம்முறை வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளரும் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஏ. சஞ்சீவன் தெரிவித்தார்.

இ.கி.மி. பெண்கள் பாடசாலை -11, இ.கி.மிஷன் ஆண்கள் பாடசாலை -09, மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலயம் மற்றும் சண்முகா மகா வித்தியாலயத்தில் தலா 07, விஷ்ணு வித்தியாலயம் மற்றும் கண்ணகி இந்து வித்தியாலயம் தலா 03, மாளிகைக்காடு சபீனா வித்தியாலயம் -01 என 41 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்- என்றார். (எ-08)

# 16 வயது சிறுமி மாயம்

## வெள்ளை வான் மீது சந்தேகம்

மஸ்கெலியா, செப். 05

தாய், தந்தை தோட்டப் பணிக்கு சென்ற வேளை 16 வயது சிறுமி காணாமல் போயுள்ள சம்பவம் நுவரெலியா - மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் காணாமல் போன சிறுமியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தனது 16 வயதுடைய மகள் சாமிமலை பெயர்லோன் தோட்ட பாகினி பிரிவில் தனது மாமி வீட்டில் இரவு தங்கியிருந்த நிலையில் தானும் மனைவியும் தோட்டப் பணிக்குச் சென்றிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காணாமல்போன தனது மகள், பெயர்லோன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் எட்டு வரை கல்வி பயின்றுள்ளதுடன் அதன் பின்னர் நோய் ஏற்பட்ட காரணத்தால் இடை நடுவில் படிப்பை நிறுத்தியுள்ளார். மகள் இரவு நேரத்தில் தனது மாமியார் வீட்டில் தங்குவதாகவும் வழக்கம் போல் தங்கள் இருவரும் பணி முடித்து வந்து பார்த்த போது மகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை சந்தேகத்துக்கு இடமான வான் ஒன்றை அப் பகுதியில் கண்டதாகவும் அதிலிருந்த இளைஞர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார். (எ)



### புலமைப்பரிசில் பரீட்சையில்

# 184 புள்ளிகள் பெற்று தரின்கௌசான் சாதனை

நோர்வூட், செப். 05

2025ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில் ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் ஆரம்பப்பிரிவு தமிழ் வித்தியாலயத்தை சேர்ந்த சுரேஸ் தரின் கௌசான் 184 புள்ளிகளை பெற்று சாதனை படைத்துள்ளார்.

குறித்த மாணவனுக்கு பாடசாலை அதிபர் ஆர். யோகராஜ் வாழ்த்துகளை தெரிவித்ததோடு அப்பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பாராட்டு தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பாடசாலையைச் சேர்ந்த வினோதன் மோனிஸ் 142, திலகர்மணி லக்சின் 136, மணிகண்டன் தேனுஸ் 151, விஸ்வராஜா லயோதிகன் 151, தொண்டமான் கேசோரி 152, பிரதீப் ரிஸ்மி 138, ரெங்கநாதன் ஹரித்ரவதனா152, ஹய்தா அப்துல் சமித்140, விஸ்வநாத் மகிஷனா135, ஞானகுமார் அவந்திகா 155, யதீஸ்குமார் அலைனா கேசி 153, கலைவாணன் லக்ஸனியா 134, லிங்கநாதன் ஜேசுவரன் ஹோலினா பிரேவ்138, நெவில் பேணான்டோ ரொஸ்சின் ஜெசிகா 152, கனகராஜா கபிஸ்கா133, ஞானகுமார் ஆத்மிக்கா142, லிங்கேஸ்வரன் யசிக்கா 151, சிமியோன் பிரவினா132, பெசில்சந்தரகாசன் அனலியா பிரதிக்ஸா 151, பிரபாகரன் சேஸ்வன் 133, கார்த்திகேசன் கெஸ்மீரா ஜொய்சி 141, சந்திரகுமார் தினுசியானி135, திருச்செல்வம் சஸ்விதா 139 ஆகிய மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். (எ)

# வாய்க்காலில் விழுந்த ஓட்டோ சாரதி மருத்துவமனையில்

சம்மாந்துறை, செப். 05

வேகக்கட்டுப்பாட்டையிழந்த ஓட்டோ வாய்க்காலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை நூலகத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில், 26 வயதுடைய சம்மாந்துறை மஜீட்புரம் பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதி காயமடைந்த நிலையில் சம் மாந்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.



இது குறித்து மேலதிக விசாரணைகளை சம் மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. கூட்டத் தொடர் ஆரம்பமாக முன் அரசின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, செப். 05

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாவு கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கி டைப்பட்ட காலப்பகுதியில், இலங் கைக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள பிரேரணை குறித்த நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு அறிவிக்கும். கடந்த காலங்களை விட தற்போது இலங்கையில் ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமைக ளில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையை சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச்சட் டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரி வித்த அவர், அதுவரை சில சட்ட நடவ டிக்கைகளை முன்னெடுக்கும் போது இந்த சட்டத்தை பயன்படுத்துவதை தவிர்க்க முடியாது என்றும் சுட்டிக்காட் டினார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த ஆண்டுகளில் எமது நாட்டில் காணப்பட்ட ஜனநாயக மீறல்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற நிலைமை தற் போது கனிசமானளவு மாற்றமடைந்துள் ளதாக சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள் ளது. மனித உரிமைகள் ஆணையாளரும் அந்த அடிப்படையிலேயே அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று அவர்கள் தரப்பில் சில கண்காணிப்புக்களும் காணப்படு கின்றன. அரசாங்கமும், வெளிவிவகார அமைச்சும் இது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக முன்னர் அல்லது அதற்கிடையில் இது தொடர்பில் அரசாங்கம் அதன் நிலைப் பாட்டை அறிவிக்கும்.

பயங்கரவாதத் தடை சட்டம் நிச்சயம் நீக்கப்பட்டு, புதிய சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். எவ்வாறிருப்பினும் அது வரை சில சட்ட நடவடிக்கைகளுக்காக பயங்கரவாதத் தடை சட்டத்தை பயன் படுத்த வேண்டியேற்பட்டுள்ளது. புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான கால அவகாசம் குறித்து இப்போது கூற முடியாது. விரைவில் அதனையும் அறிவிப்போம் - என்றார். (அ)

# செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கம் ஒருபோதும் தலையிடாது

## விசாரணைக்கு தேவையான வசதிகள் வழங்கப்படும்

கொழும்பு, செப். 05

செம்மணி மனித புதைக்குழி விவகா ரத்தில் அரசாங்கம் தலையிடாது. ஆனால் பொலிஸ் விசாரணைகள் மற் றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும். நீதிமன்றத்து டன் தொடர்புடைய விவகாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு தேவையற்ற தாகும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.

செம்மணி மனித புதைக்குழி தொடர் பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையொன்றை வெளி யிட்டிருந்தது. குறித்த அறிக்கையில் செம்மணிக்கு சுயாதீன விசாரணை பொறிமுறையை நிறுவுமாறு பரிந்து ரைக்கப்பட்டுள்ளது. அத்தோடு சர்வ தேச நிபுணத்துவத்தின் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

செம்மணி மனித புதைகுழி தொடர் பில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. எனவே அதனுடன் தொடர்புடைய விடயங்கள் நீதிமன்றத் துக்கே அறிவிக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமான நிறுவனமாகும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட் டுள்ளது. எனவே நீதிமன்ற நடவடிக்கை களுக்கான வசதிகள் அரசாங்கத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக விசேட குழுவொன்றினால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன. மறுபுறம் பொலிஸ் விசாரணை களும் இடம்பெற்று வருகின்றன. நீதிமன் றத்துக்கு அறிவிக்குமாறு அதற்கான தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கு நாம் இடமளித்திருக்கின்றோம். அதற்க மைய அந்த விவகாரத்தில் நியாயமான செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக நம்புகின்றோம் - என்றார். (அ)

## புலமைப்....

ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந் திகா குமாரி தெரிவித்தார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் ஆனந்தசோதி லக்சயன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூல மாக முதலிடம் பெற்றுள்ளார்.

அம்பலாங்கொடை சிறி தேவானந்தா கல்லூரியின் சந்துனி அமயா சிங்கள மொழி மூலம் முதலிடம் பெற்றுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்க ளின் எண்ணிக்கை 51,969 ஆகும், இது 17.11 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

இது கடந்த ஆண்டைவிட 1.06 வீதம் அதிகம் என்று பரீட்சைகள் ஆணையா ளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்தார். (அ)

## மனிதப்....

முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், காணாமல் போனோர் தொடர்பில் ஆராயும் அலு வலகத்தின் தலைமீட்டின் கீழ், செம் மணி மனித புதைகுழியின் அகழ் வாராய்ச்சி, சர்வதேச தர நிர்ணயங் களுக்கு அமைய, வெற்றிகரமாக முன் னெடுக்கப்படுவதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் உண்மையைத் தேடுவது இந்த அரசாங்கத்தின் இறுதிப் பொறுப் பாகும் என நீதி அமைச்சர் சுட்டிக் காட் டியுள்ளார். (அ)

## பொதுமக்கள்...

தவறியதாகக் கூறப்படும் குற்றச்சாட் டுகள் தொடர்பானது இந்த வழக்கு.

இந்த வழக்கை கல்கிசை நீதவான் நீதிமன்றத்திலிருந்து வேறு நீதிமன்றத் திற்கு மாற்றக் கோரி செனவிரத்ன மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இட மாற்ற விண்ணப்பத்தை தாக்கல் செய்தி ருந்தார்.

சமர்ப்பிப்புகளை மதிப்பாய்வு செய்த பின்னர், நீதிபதிகள் மாயாதுன்னே கொரியா மற்றும் மஹேன் கோபல்லவ ஆகியோர் அடங்கிய இரண்டு நீதிபதி கள் கொண்ட அமர்வு இடைக்கால நிவாரணம் வழங்கியது.

பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் மேலும் நோட்டீஸ் அனுப்பி, வழக்கை நவம்பர் 25 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைத்தது - என்றார். (அ-05)

## கச்சதீவு...

பேசுவது வழமையானதொரு விடய மாகும். அவர்கள் தமக்காக வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு கச்சதீவு தொடர்பிலோ அல்லது வடக்கு மக்க ளின் பிரச்னைகள் தொடர்பிலோ வாக்கு றுதிகளை வழங்குவர்.

எனவே கச்சதீவு தொடர்பில் நாம் மீண்டும் பேச வேண்டிய தேவை இல்லை. கச்சதீவு எமக்கு உரித்தான நிலப்பரப்பாகும். அதில் சுற்றுலா அபி விருத்தி திட்டங்களை முன்னெடுத்து , அப்பகுதியை அபிவிருத்தி செய்வது குறித்தும் கூடுதல் அவதானம் செலுத்தி யிருக்கின்றோம்.

அந்த வகையில் தென்னிந்தியாவில் கூறப்பட்ட கருத்துக்கும் ஜனாதிபதியின் கச்சதீவு விஜயத்துக்கும் எவ்வித தொடர் பும் இல்லை. அரச தலைவர் என்ற ரீதியில் நாட்டிலுள்ள சகல பிரதேசங் களுக்கும் ஜனாதிபதியால் செல்ல முடியும்.

அவ்வாறு செல்லும் போது மக்களு டன் கலந்துரையாடி, அப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவி ருத்திகள் தொடர்பில் நேரடியாக அவ தானம் செலுத்தினால் அது சிறந்ததா கும். நாம் அறிந்த வகையில் இதுவரை யில் அரச தலைவரொருவர் கச்சதீவுக்குச் செல்லவில்லை. அந்த வகையில் ஜனாதி பதியின் இந்த விஜயம் மிக முக்கியத்து வமுடையதாகும் - என்றார். (அ)

## இலங்கை...

எனவும், சமீபத்தில் அமுல்படுத்தப் பட்ட குடிவரவு மற்றும் வெளிநாட்டி னர் சட்டத்தின் கீழ் உள்ள தண்டனை விதிகளிலிருந்தும் இலங்கைத் தமிழர்க ளுக்கு மத்திய அரசு விலக்கு அளித்துள் ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போர் மற்றும் பொருளாதார நெருக் கடி காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவின் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை ஏதிலி கள், சுதந்திரமாக இந்தியாவில் தங்கியி ருப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டு மெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கச்சதீவை...

ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எம்முடைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தமையை தொடர்ந்து பல அபிவி ருத்தி திட்டங்களை நாம் ஆரம்பித்துள் ளோம்.அதில் ஜனாதிபதியும் பங்கேற் பார். அதேபோன்று ஜனாதிபதியால் பங்கேற்க முடியாத நிகழ்வுகளுக்கு அமைச்சர்கள் பங்கேற்பார்கள். கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு அபிவி ருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

ஜனாதிபதியின் கச்சதீவுகான ஜனாதி பதியின் விஜயத்தில் விசேட விடய மொன்றல்ல. தென்னிந்தியாவை பொறுத்தவரையில் தேர்தல் காலத்தில் கச்சதீவு தொடர்பிலும் , வடக்கு பிரச்னை தொடர்பிலும் அதிகம் பேசு வார்கள். இந்நிலையில் கச்சதீவு தொடர்பில் மீண்டும் உரையாடுவதற் கான தேவைப்பாடு இல்லை.

ஏனெனில் கச்சதீவு எம்முடைய நாட்டிற்கு சொந்தமான பூமியாகும். சுற்றுலாத்துறையை இலக்காக்கொண்டு அந்த பகுதியில் அபிவிருத்தி திட்டங்க ளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள் ளோம். தென்னிந்தியாவில் அரசியல் வாதிகள் கூறிய கருத்துக்கும் ஜனாதி பதியின் கருத்துக்கும் எந்தவித தொடர் பும் இல்லை.

ஜனாதிபதி என்ற வகையில் நாட்டின் எந்த பகுதிக்கும் ஜனாதிபதியால் செல்ல வும் முடியும் அதேபோன்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடவும் முடியும். அந்த பகுதிகளின் அபிவிருத்தி தொடர்பி லும் பார்க்க வேண்டும்-என்றார். (அ)

## மண்டைதீவு புதைகுழி...

வேலணை பிரதேச சபையின் உறுப்பின ரான சுவாமிநாதன் பிரகலா தன் ஆகி யோரால் வேலணை பிரதேச சபையின் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் உறுப் பினரான திருமதி அனுசியா ஜெயகாந்த், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி யின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன் மற்றும் திருநாவுக்கரசு சிவகுமாரன், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான செந்தமிழ்ச்செல்வன் திருக்கேதீஸ்வரன், தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான மங்களேஸ்வரன் கார்த் தீபன் ஆகியோரது பிரசன்னத்துடன் இரு வேறு முறைப்பாடுகளை நேற்று ஊர்காவற் றுறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளனர்.

35 வருடங்களுக்கு முன்னர் ஒகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 ஆகிய நாள்களில் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது மண் டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும் பான் ஆகிய பகுதிகளில் பாரிய மனிதப் படுகொலை நிகழ்த்தப்பட்டதாகவும், இதன்போது 80 இற்கும் அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் காணாம லாக்கப்பட்டிருந்ததுடன் மேலும் பலர் கொல்லப்படும் இருந்தனர்.

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் 45 இற்கும் அதிகமான உட லங்கள் மண்டைதீவு 2 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருப் பதுடன் அதற்கான வாழும் சாட்சியங் கள் உறுதியாகவும் இருக்கின்றன. அதேபோன்று அதற்கு அயலில் உள்ள பாடசாலை கிணறு ஒன்றுக்குள்ளும் உடலங்கள் இருக்கின்றன.

இந்தநிலையில் குறித்த படுகொலை சாட்சியமாக உறவுகளை பறிகொடுத்த தவர்கள், குறித்த கிணற்றை அகழ்ந்து உடலங்களை வெளிக்கொணர்ந்து உண்மைகள் வெளி உலகுக்கு வெளிக் கொணரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த மாதம் 20 ஆம் திகதி வேலணை பிரதேச சபையில் குறித்த புதைகுழியை அகழ்ந்து உண்மை கள் வெளிக்கொணரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் அனைத்து உறுப்பி னர்களின் ஏக ஆதரவுடன் நிறை வேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## அரியாலை...

ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை 11ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக் காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், 43 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப் பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாதச் சட்டம் நிச்சயம் நீக்கப்படும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி

கொழும்பு, செப். 05

**பயங்கரவாத தடைச்சட்டம் நிச்சயம் நீக்கப்படும் என அமைச்சரவை பேச்சளார் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாயளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச்சட்டத்தை நிச்சயம் நீக்குவோம். அதற்கு பதிலீடாக நாம் புதிய சட்டத்தை கொண்டு வருவோம். சில சட்ட நடவடிக்கைகளுக்கு இந்த சட்டத்தை பாவிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அதேவேளை பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான கால வரையறை குறித்தும் இதன் போது கேள்வி எழுப்பப்பட்டது.

தற்போது அதனை என்னால் கூற முடியாது. எதிர்காலத்தில் அதனுடன் தொடர்புடைய விடயங்களை தெரியப்படுத்துவோம்-என்றார். (அ)

## திருமணத்தில் கலந்துரையாடிய இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள்

கொழும்பு, செப். 05

இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் பல சிரேஷ்ட அரசியல்வாதிகளுக்கும் இடையே அண்மையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள ஷங்ரி-லா விருந்தகத்தில் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவவின் மகளின் திருமணத்தின் போது இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் வஜிர அபேவர்தன, முன்னாள் அமைச்சர்களான அலி சப்ரி, டலஸ் அழகப்பெரும, விஜயதாஸ ராஜபக்ஷ, சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர மற்றும் பல அரசியல்வாதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து இந்த அரசியல்வாதிகளிடையே ஒரு கலந்துரையாடலும் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சகல மின்சார சபை ஊழியர்களும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்!

கொழும்பு, செப். 05

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறைக்கு எதிராக, பொறியியலாளர்கள் உட்பட அனைத்து மின்சார சபை ஊழியர்களும் நேற்று நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை மின்சார பொறியியல் சங்கத்தின் தலைவர் தனுஷ்க பராக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மறுசீரமைப்பு செயல்முறைகைளை சீர் செய்து ஊழியர்களின் தொழில்முறை உரிமைகளைப் பாதுகாக்க சமர்ப்பிக்கப்பட்ட 24 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பணிப்புறக்கணிப்பிற்கு அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஆதரவளிக்கவுள்ளன.

மின்சார சபையின் மறுசீரமைப்பு செயல்முறை, ஊழியர்களின் ஊக்கத்தொகை மற்றும் பதவி உயர்வு இல்லாமை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.

சரியான பதில் கிடைக்காவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார். (அ)

## இலங்கைக்கு சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் குவைத் ஏயார்வேஸ்!

கொழும்பு, செப். 05

இலங்கைக்குப் பயணிகள் விமானங்களை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக குவைத் ஏயார்வேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் இந்த சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தின் தேசிய விமான சேவைகள் ஞாயிறு, புதன், வியாழன், மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில், பயணிகளின் வசதி கருதி இலங்கைக்கான விமானங்களை மீண்டும் இயக்க தீர்மானித்துள்ளதாக குவைத் ஏர்வேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

## புலமைப்பரிசில் பரீட்சை; 51,969 மாணவர்கள் சித்தி!

கொழும்பு, செப். 05

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளில் மொத்தம் 51,969 பேர் (17.11 வீதம்) சித்தியடைந்துள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிங்கள மொழி மூலப் பாடத்திற்கு 140 வெட்டுப் புள்ளிகளும் தமிழ் மொழி மூலப் பாடத்திற்கு 134 வெட்டுப்புள்ளிகளும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சிங்கள மொழி மூலப் பாடத்தில் அதிகபட்சமாக 198 புள்ளிகள் காலி மாவட்டத்திலிருந்து பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தமிழ் மொழி மூலப் பாடத்தில் அதிகபட்சமாக 194 புள்ளிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்துபெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் விசேட குழுக்களை நியமிக்க அனுமதி!

கொழும்பு, செப். 05

காணாமல்போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்காக தகைமையுடன் கூடிய நபர்களை உள்ளடக்கிய குழுக்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன மற்றும் காணக்கிடைக்காமை ஆட்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுடைய உறவுகளுக்கு அறிக்கைகளை வழங்குதல் இவ் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை குறித்த அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 16,966 முறைப்பாடுகளில் விசாரணைகளுக்காக மேலும் 10,517 முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதற்கமைய இன்னலுற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் விசாரணை மற்றும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், குறித்த பணிகளுக்காகவும் ஓய்வுநிலை நீதிபதிகள், சிரேஷ்ட நிர்வாக அலுவலர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தகைமையுடன் கூடிய நபர்கள் 75 பேருடன் கூடிய உப பணிக்குழு 25 குழுக்களை நியமிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# கச்சதீவு இலங்கைக்கே சொந்தம்!

## கூறுகிறார் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, செப். 05

கச்சதீவு தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள்ள தேவையில்லை. ஏனெனில் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அரசாங்கம் ஆரம்பிக்கப்பட்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஜனாதிபதி அண்மையில் வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்துவைத்தார். வடக்கு விஜயத்தின் போது ஜனாதிபதி கச்சதீவுக்கு சென்றிருந்தார். ஜனாதிபதி கச்சதீவுக்கு விஜயம் செய்தமை விசேட விடயமல்ல.

தற்போது தென்னிந்திய அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் குழுக்கள் தங்கள் அரசியல் இலாபத்தினை இலக்காகக் கொண்டு கச்சதீவு விவகாரத்தினை கருவியாக பயன்படுத்துகின்றனர்.

கச்சதீவு தொடர்பாக எந்தவொரு கலந்துரையாடலும் மேற்கொள்ள தேவையில்லை. ஏனெனில் கச்சதீவு எமக்கு சொந்தமானது-என்றார். (அ)

## மகிந்தவின் உத்தியோகபூர்வ வீடு குற்ற புலனாய்வு துறைக்கு

கொழும்பு, செப். 05

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்தை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

அரச உயர் அதிகாரிகளால் இது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை அமுல்படுத்த அரசாங்கம் எதிர்ப்பாத்துள்ளது.

இந்த சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு எதிர்வரும் காலங்களில் சபாநாயகரிடம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org